செய்தி வெளியீடு எண்: 492 நாள்: 20.10.2016

<u>செய்திவெளியீடு</u>

**<u>மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் மேலாண்மை இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம்</u>**

- **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க ரூ.5,780.92 கோடியிலான விவசாய கடன் தள்ளுபடி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.**
- **நடப்பாண்டில் 15.10.2016 வரை 2,05,706 விவசாயிகளுக்கு ரூ.1345.33 கோடி பயிர்க்கடன்.**
- **மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க ரூ.36 கோடி அளவிற்கு கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்கப்பட்டுள்ளது.**
- **கூட்டுறவு நியாயவிலைக்கடைகளில் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் ஐ.எஸ்.ஓ. மற்றும் ஐ.எஸ்.ஐ. சான்றிதழ் பெற்ற நுகர்வோர் பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை.**
- **பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் ரூ.56.12 கோடி அளவிற்கு காய்கறிகள் விற்பனை. அம்மா மருந்தகங்கள் மற்றும் கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் ரூ.403.73 கோடி மதிப்பில் மருந்துகள் விற்பனை.**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் இன்று **(20.10.2016)** தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூட்ட அரங்கில், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்களால் விவசாயிகள் பயனடையும் வகையில் அறிவிக்கப்பட்ட பயிர்க்கடன் தள்ளுபடி திட்டம், சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் கூட்டுறவுத்துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது: **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள், விவசாய மேம்பாடு மற்றும் விவசாயிகள் நலன் கருதி சிறு, குறு விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்டு, 31.3.2016 அன்று நிலுவையில் இருந்த ரூ.5780.92 கோடியிலான பயிர்க் கடன், நடுத்தர கால வேளாண்மைக் கடன் மற்றும் நீண்டகால பண்ணை சார்ந்த கடன் ஆகிய அனைத்தும் தள்ளுபடி செய்து ஆணையிட்டதன் அடிப்படையில், தகுதியான பயனாளிகளின் பட்டியல் தமிழக கூட்டுறவுத்துறையின் வரலாற்றில் முதன் முறையாக இணையதளத்தில் வெளியிடப்பட்டு பயனாளிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சிகாலத்தில் வழங்கப்பட்ட பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தில் காணப்பட்ட தவறுகளை களைந்து எவ்வித புகாருக்கும் இடம் அளிக்காமல், விமர்சனம் ஏதும் இல்லாமல் மாண்புமிகு அம்மா அவர்கள் தற்போது வழங்கிய கடன் தள்ளுபடி திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திய கூட்டுறவுத்துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் சார்பாக மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தனது பாராட்டுகளை தெரிவித்துக்கொண்டதோடு, எதிர்காலத்தில் கூட்டுறவுத்துறை சிறப்பாக செயல்பட்டு பொதுமக்களுக்கும் அரசுக்கும், ஒரு பாலமாக செயல்படவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு அம்மா அவர்களால் விதி 110ன் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தையும் சிறப்புடனும், முனைப்புடனும், தாமதமின்றி நிறைவேற்றப்படவேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழ்நாட்டில் உள்ள 1,240 பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணய சங்கங்களை முழுமையாக கணினிமயமாக்கவும், கிராமப்புறங்களில் அமைந்துள்ள கூட்டுறவு நிறுவனங்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு 2,966 கூட்டுறவு அமைப்புகளில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு கேமரா நிறுவவும், தனியார் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாக கூட்டுறவு வங்கிகள் நவீனமயமாக்கப்பட்ட வசதிகளுடன் புதிதாக 18 கிளைகளை துவக்குவது

குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, மேற்கண்ட பணிகளை விரைந்து முடிக்க தக்க அறிவுரைகள் வழங்கினார்.

மேலும், வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு தேவைக்கு ஏற்ப முதற்கட்டமாக 50 கூட்டுறவு நிறுவனங்களில் உயர்தர பாதுகாப்பு பெட்டகங்கள் அமைப்பது மற்றும் படிப்படியாக, இதர சங்கங்களிலும் இவ்வசதியினை அதிகப்படுத்த தக்க நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவும் அறிவுரை வழங்கினார்கள்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின்தொடரும் மக்கள் நல நல்லாட்சியில் பொதுமக்களின் முழு நம்பிக்கையை பெற்றதை நிருபிக்கும் வகையில், கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள்/வங்கிகள் முதல் மாநில வங்கிகள் வரை 30.9.2016 வரை ரூ.54913.80 கோடி அளவிற்கு வைப்பீடுகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட வைப்புத்தொகை முறைப்படி முதலீடு மற்றும் கடன் வழங்கியதன் மூலமாக வருவாய் ஈட்டப்பட்டு வைப்புதாரர்களக்கு எவ்வித தடையுமின்றி உடனுக்குடன் வட்டி வழங்கப்பட்டு வருகிறது. இப்பணியை தொடர்ந்து செய்வதுடன், மேம்படுத்தவும் அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் 5 கிளைகளில் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் அலகுகள் நிறுவும் பணியினை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பணிகளை விரைந்து முடிக்கவும், கூட்டுறவு அமைப்புகளில் சூரிய ஒளி சக்தி மின்சாரம் அமைப்பது குறித்து ஒரு வல்லுநர் குழுவை அமைத்து ஆய்வு செய்யவும் உயர் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு, நடப்பாண்டில் ரூ.6,000 கோடி அளவிற்கு வட்டியில்லா பயிர்க் கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, 15.10.2016 வரை 2,05,706 விவசாயிகளுக்கு ரூ.1345.33 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 22,205 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.119.90 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கடன் தள்ளுபடி பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் உடனுக்குடன் பயிர்க்கடன்கள் வழங்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

மேலும், சிறு/குறு விவசாயிகளின் விளைபொருட்களை பாதுகாத்து, நல்ல விலை கிடைக்கும் நேரத்தில் விற்பனை செய்வதற்கும், அப்பொருட்கள் மீது தானிய ஈட்டுக்கடன் பெறவும் வழிவகை செய்யவேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் கடந்த **5** ஆண்டுகளில் மட்டும் ரூ.489.62 கோடி செலவில் 5,10,600 மெ.டன். கொள்ளளவு கொண்ட 3879 கிடங்குகள் கட்ட ஆணையிடப்பட்டு அச்சங்கங்களுக்கு நிரந்தர வருவாய் ஈட்டுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிடங்குகளில் வைக்கப்படும் விவசாயிகள் விளைவித்த பொருட்களுக்கு, தானியத்தின் மதிப்பில் 60 விழுக்காடு முதல் 80 விழுக்காடு வரை குறைந்த வட்டிவிகிதத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடப்பாண்டில் 30.9.2016 வரை ரூ.145.30 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து வகையான கூட்டுறவுச் சங்கங்களிலும் முறைகேடுகளை தவிர்க்கும் பொருட்டு மண்டல இணைப்பதிவாளர்கள், சரகத் துணைப்பதிவாளர்கள், கள அலுவலர்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர்கள் ஒவ்வொரு மாதமும் தங்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட கள ஆய்வுப் பணியை தவறாது மேற்கொள்ளவேண்டும் எனவும், இது குறித்து ஆய்வு செய்த மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் ஒரு மாவட்ட அலுவலர்களைக்கொண்டு மற்றொரு மாவட்டத்தில் ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்கள்.

மண்டல இணைப்பதிவாளர்களால் கடந்த 6 மாதங்களில் ஆய்வு செய்யப்பட வேண்டிய 1402 கூட்டுறவுச் சங்கங்கள், சரகத் துணைப்பதிவாளர்களால் ஆய்வு செய்யப்படவேண்டிய 3817 சங்கங்கள், கள அலுவலர்களால் ஆய்வு செய்யப்படவேண்டிய 11645 சங்கங்கள், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை

இயக்குநர்களால் ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டிய 1377 சங்கங்கள், மத்திய கூட்டுறவு வங்கிப் பொதுமேலாளர்களால் ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டிய 1955 சங்கங்களிலும் மேற்கொள்ளப்படவேண்டிய கள ஆய்வுப் பணிகளை சரிபார்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனி வருங்காலங்களில் அனைத்து அலுவலர்களும் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளை கண்டிப்பாக எய்தவேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் 44287 பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய போனஸ் மற்றும் கருணைத் தொகை குறித்து ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுவரை 42638 பணியாளர்களுக்கு ரூ.36 கோடி அளவிற்கு போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சியுள்ள பணியாளர்களுக்கும் விரைந்து வழங்க துரித நடவடிக்கை எடுக்க துறை அலுவலர்களை அறிவுறுத்தினார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் உன்னத திட்டமான பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திட்டத்தின்கீழ், 73 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 17.10.2016 வரை 19486 மெ.டன் காய்கறிகள் ரூ.56.12 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து தரப்பு மக்களும் 15 சதவிகிதம் வரை தள்ளுபடி விலையில் தரமான மருந்துகளை பெற்று பயனடையும் வகையிலான 106 அம்மா மருந்தகங்கள் மற்றும் 187 கூட்டுறவு மருந்தகங்கள் என மொத்தம் 293 மருந்தகங்கள் வாயிலாக இதுவரை ரூ.403.73 கோடி மதிப்பிலான தரமான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய திட்டமான அம்மா மருந்தகங்கள், பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் தேவைகளை கருத்தில்கொண்டு தரமான மருந்துகளையும், காய்கறிகளையும், குறைந்த விலையில் தங்குதடையின்றி உடனடியாக கிடைக்க துறை அலவலர்கள் செயல்பட வேண்டும் எனவும், இப்பணிகளைச் சிறப்பாக செய்த திருச்சி மண்டல இணைப்பதிவாளர் திரு.கே.சி. ரவிச்சந்திரன் அவர்களை பாராட்டிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இணைப்பதிவாளருக்கு சான்றிதழ் வழங்கி கவுரவித்தார்கள்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, ஏழை எளிய மக்களின் பசிப்பிணி போக்கும் மகத்தான திட்டத்தின் கீழ் விலையில்லா அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள், 1.86 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் அரும்பணியினை கூட்டுறவுத் துறை சார்ந்த 32,618 நியாயவிலைக் கடைகள் மேற்கொண்டு வருகின்றன. எதிர்காலத்தில் பொதுவிநியோகத்திட்ட நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமன்றி மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் ஐ.எஸ்.ஓ. மற்றும் ஐ.எஸ்.ஐ. சான்றிதழ் பெற்ற நுகர்வோர் பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்களின் எண்ணத்தினை ஈடேற்றும் வகையில் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மக்கள் நலன் ஒன்றினையே கருத்திற்கொண்டு, திட்ட செயலாக்கத்தில் எவ்வித புகார்களுக்கும் இடம் தராத வகையில் அர்ப்பணிப்போடு பணியாற்ற வேண்டும் என மீண்டும் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.அ.ஞானசேகரன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.த.ஆனந்த், இ.ஆ.ப., முனைவர் க.இராஜேந்திரன், திரு.எம்.மோகன், திரு.மு.செந்தமிழ்ச்செல்வன், திருமதி ஆர்.பிருந்தா, திரு.பா.பாலமுருகன், திரு.ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**